# OUR LADY OF GOOD HEALTH PARISH
# தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

**131 Birchmount Road, Scarborough, ON M1N 3J7**
416-264-OLGH (6544) **: Phone**
416-264-6545 **: Fax**
office@olghtamilparish.com **: Email**
www.olghtamilparish.com **: Website**




என் அன்பான தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களே,

உங்கள் அனைவரையும் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களும் ஆசிகளும் கூறி, இந்த அன்பு மடல் மூலம் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சியும் உவகையும் அடைகின்றேன்.

கடந்த சில மாதங்களாக மட்டுப்படுத்தப்பட்ட வகையில் திருப்பலி ஒப்புக்கொடுக்க ரொறன்ரோ அதியுயர் மறைமாவட்டம் அனுமதி வழங்கியிருந்தது. இருப்பினும், தற்போதைய வேகமான நோய் பரவலும், நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும், ரொறன்ரோ மற்றும் பீல் பகுதிகளை கார்த்திகை 23ம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 12:00 மணியிலிருந்து மீண்டும் முடக்கநிலைக்குக் கொண்டுசென்றுள்ளதை ஒன்ராரியோ அரசு அறிவித்ததை நீங்கள் அறிவீர்கள். அதற்கமைவாக, ரொறன்ரோ அதியுயர் மறைமாவட்டமும், முடக்கநிலைக்குச் செல்லும் பகுதிகளிலுள்ள ஆலயங்களில் திருப்பலி ஒப்புக்கொடுப்பதை மறு அறிவித்தல் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

இந்த வாரத்திலிருந்து எமது ஆலயம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 11:00 மணியிலிருந்து மதியம் 1:00 மணிவரை, தனிப்பட்ட வழிபாட்டிற்காக திறந்திருக்கும். நடைமுறையிலுள்ள அனைத்து கட்டுப்பாடுகளுக்கும் விதிமுறைகளுக்கும் அமைவாக, ஆகக்கூடியதாக 10 பேர் மட்டுமே ஒரு நேரத்தில் ஆலயத்திற்குள் வழிபாட்டில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்

**ஞாயிறு திருப்பலிகள் எமது ஆலயத்திலிருந்து இணையவழியாக எமது இணையத்தளம், முகநூல் மற்றும் ஐ.பி. ரிவி ஊடாக, காலை 9:00 மணிக்கு ஆங்கிலத்திலும் காலை 10:30 மணி தமிழிலும் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலிகளில் ஒரே குடும்பமாக இணைந்து பங்குபெற உங்களனைவரையும் அழைக்கின்றோம்.**

ஞாயிறு திருப்பலிகளுக்கு அனுசரணை வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். அவர்களின் விபரங்கள் திருப்பலிகளின் போது அறிவிக்கப்படும். முதலில் வருகின்றவர்களுக்கு முதல் வாய்ப்பு என்ற அடிப்படையில் ஒவ்வொரு ஞாயிறு திருப்பலிக்கும் முதல் மூன்று அனுசரணையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். (அனுசரணையாளர் ஒருவர் அல்லது குடும்பத்தினரிடமிருந்து $100.00 அன்பளிப்பாக பெறப்படுவதோடு, அதற்குரிய வரிவிலக்கு பற்றுச்சீட்டும் வழங்கப்படும்).

எமது பங்கு மக்களின் ஆன்மீக தேவைகளை நிறைவேற்ற எமது பங்கு எந்நேரமும் ஆயத்தமாக இருக்கினறது என்பதை அறியத்தருவதோடு, உங்களது ஆன்மீக தேவைகளுக்கு அலுவலத்தை (416-264-6544) அல்லது பங்குத்தந்தையை (647-671-8272) தொலைபேசியில் அழைத்து பேசலாம்.

இறை இயேசுவின் ஆசியும் வாழ்த்துக்களும் கூறி நிற்கும்,
உங்கள் பணியாளன்,

அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்
பங்குத்தந்தை, தூய ஆரோக்கிய அன்னை தமிழ்ப் பங்கு
மின்னஞ்சல்: office@olghtamilparish.com
இணையத்தளம்: www.olghtamilparish.com
முகநூல்: https://www.facebook.com/OLGHTamilParish